DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case no: CC.No.135 /2022**

**prosecution witness: Pw 2**

| | | | |
|---|---|---|---|
| Name | : | Caste | : |
| Fathers Name | : | calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**Accused absent 317 petition filed**

வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.C.No./20

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | பாலு | ஜாதி | : |
| த/பெ. | : | | தொழில் | : |
| கிராமம் | : | | சமயம் | : |
| தாலுகா | : | | வயது | : |

**24.03.2023**

முதல் விசாரணை:

1. நான் இராமேஸ்வரம் பேக்கரும்பில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 13.01.2022-ம் தேதி காலை 6 அல்லது 06.45 மணியளவில் நான் பேக்கரும்பில் உள்ள எனது வீட்டில் இருந்து தங்கச்சிமடத்திற்கு இருசக்கர வாகனத்தில் சென்றேன். நான் ஒரு ஆளை ஏற்றுவதற்காக தண்ணீர் ஊற்று பக்கத்தில் நின்றுகொண்டிருந்தேன். அப்போது அசோக நம்பு எனக்கு முன்பு இருசக்கர வாகனத்தில் ரோட்டில் சென்றார். அப்போது எதிரே வந்த ஓம்னி வேன் தட்டிவிட்டு மணலில் இறங்கி நின்றது. அதோடு அசோக நம்பு கீழே விழுந்து கிடந்தார். அவருக்கு மண்டையிலும், காலிலும் அடிபட்டிருந்தது.அப்போது அருகில் இருந்த ஆட்கள் சென்று பார்த்தோம்.அதன்பின்பு அசோக நம்பு வீட்டிற்கு எதிரே உள்ள வேலாங்கண்ணனுக்கு போன் மூலம் தகவல் சொன்னேன்.

2. அவர் கருணாகரனுடன் வந்து 108 ஆம்புலன்சில் ஏற்றி சென்றுவிட்டார்கள். நானும் சென்றுவிட்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

1. இறந்து போன அசோக நம்பு ஒரே ஊர்காரர், முறைக்கு சித்தப்பா முறை வேண்டும். நான் தண்ணீர் ஊற்றில் நின்ற இடத்திற்கும், விபத்து நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு எவ்வளவு தூரம்

இருக்கும் என்றால் ஒரு 150, 200 அடி இருக்கும்.நான் போன் மூலம் தகவல் சொன்னவுடன் சம்பவ இடத்திற்கு யாரெல்லாம் வந்தார்கள் என்றால் வேலாங்கண்ணனும், கருணாகரனும் வந்தார்கள். ஆம்புலன்சிற்கு யார் தகவல் சொன்னார்கள் என்று தெரியவில்லை. போலீஸ் சம்பவ இடத்திற்கு எப்போது வந்தார்கள் என்றால் சம்பவம் நடந்த 1/2 மணி நேரம் கழித்து வந்தார்கள்.

2. ஆம்புலன்ஸ் வந்தவுடன், போலீசும் சம்பவ இடத்திற்கு வந்துவிட்டார்கள்.இரண்டு போலீசார் வந்தார்கள். போலீசார் என்னை சம்பவம் நடந்து 1 வாரம் கழித்து காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். அசோக நம்புடன் பைக்கிள் உடன் வேறு யாரும் வரவில்லை. ஓம்னியில் யார் வந்தார்கள் என்றால் குடும்பத்தோடு வந்திருந்தார்கள் யார் என்று விபரம் தெரியாது. அசோக நம்பு எவ்வளவு காலமாக பைக்கு ஓட்டுகிறார் என்று விபரம் தெரியுமா என்றால் எனக்கு விபரம் தெரிந்த காலத்தில் இருந்து ஓட்டிவருகிறார். அவருக்கு ஓட்டுனர் உரிமம் உள்ளதா என்றால் தெரியாது.நான் தற்போது இங்கு சொன்ன விபரத்தை தான் போலீஸ் விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரிதான்.

3. அசோக நம்புவிற்கு சரியாக இருசக்கர வாகனம் ஓட்டவே தெரியாது என்றால் சரியல்ல. அவருக்கு ஓட்டுனர் உரிமமும் இல்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.விபத்திற்கு காரணம் அசோக நம்புவின் கவனக்குறைவுதான் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சம்பவ இடத்தில் நான் இல்லை என்றாலும், விபத்து நடந்தது பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் சரியல்ல. இறந்த நபர் எனக்கு வேண்டியவர் என்பதால் அவரின் குடும்பத்தினர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.